# நீங்கள் ஹெபடைடிஸ் B பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமா?

ஹெபடைடிஸ் B என்பது கல்லீரலைத் தாக்கி, கல்லீரல் புற்றுநோயை உண்டாக்கும் ஒரு வைரஸ் ஆகும்.

பாதிக்கப்பட்ட பலர் நோய் வாய்ப்பட்டிருப்பதாகத் தெரியவோ அல்லது உணரவோ மாட்டார்கள் என்பதால் தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பதே தெரியாமல் பிறருக்கு வைரஸைக் கடத்த முடியும்.

ஹெபடைடிஸ் B ஐத் தடுக்கும் பாதுகாப்பான மற்றும் சிறந்த தடுப்பூசி ஒன்று உள்ளது.

## ஹெபடைடிஸ் B பின்வரும் வழிகளில் பரவுகிறது:

- பிரசவத்தின்போது கர்ப்பிணியிடமிருந்து குழந்தைக்கு
- பாலியல் தொடர்பு
- பாதிக்கப்பட்ட நபரின் ரத்தத்துடன் தொடர்பு ஏற்படும்பொழுது
- ரேஸர், பல் துலக்கும் பிரஷ் அல்லது நகம் வெட்டிகளைப் பகிருதல்

## ஹெபடைடிஸ் B பின்வரும் வழிகளில் பரவாது:

- உணவு அல்லது உண்ணும் பாத்திரங்களைப் பகிருதல்
- அணைத்தல், முத்தமிடுதல் அல்லது கைகளைப் பிடித்தல்

# யாரெல்லாம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்?

- கர்ப்பமாக உள்ளவர்கள்
- ஹெபடைடிஸ் B உள்ளவர்களுடன் ஒன்றாக வசிப்பவர்கள்
- ஆப்ரிக்கா அல்லது ஆசியா போன்று ஹெபடைடிஸ் B பரவலாகக் காணப்படும் பகுதிகளில் பிறந்தவர்கள், அல்லது அந்தப் பகுதிகளில் பிறந்த பெற்றோர் உள்ளவர்கள்
- சில ஆபத்துக் காரணிகள் கொண்டவர்கள்

**மேலும் தகவல்களுக்கு, இங்கே செல்லவும்:**

**www.cdc.gov/hepatitis/hbv/**
**doh.wa.gov/hepbhub**

Hep B Hub
doh.wa.gov/hepbhub

Washington State Department of Health

DOH 420-408 May 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

Minnesota Department of Health (மினசோட்டா சுகாதாரத்துறையின்) ஒப்புதலுடன் தழுவப்பட்டது